DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF MAGALIR NEETHIMANDRAM (FAST TRACK MAHILA COURT, UDHAGAMANDALAM) SESSIONS JUDGE OF THE NILGIRIS AT UDHAGAMANDALAM.

| | |
|---|---|
| Sessions | Spl.C.C. 49/2022 |
| | Prosecution |
| Deposition of witness for | PW2 |
| Name | கல்பனா |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |
| Mobile No. | |
| Email I.D | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 5th day of December 2022.

**05.12.2022.**

நீதிமன்றத்தின் கதவு ஜன்னல்களை அடைத்து நீதிமன்றத்தில் எதிரி, எதிரி தரப்பு வழக்கறிஞர், அரசு குற்ற வழக்கறிஞர், நீதிமன்ற பெஞ்ச் கிளார்க், நீதிமன்ற தட்டச்சர், அலுவலக உதவியாளர் மற்றும் சாட்சி கல்பனா மட்டும் இருக்கச் செய்யப்பட்டது.

<u>முதல் விசாரணை:-</u>

நான் கஸ்தூரிபாய் காலனியில் குடியிருக்கிறேன். கூலி வேலை பார்க்கிறேன். எனக்கு 2 மகள்கள். பாதிக்கப்பட்ட சிறுமி என்னுடைய 2வது மகள். அவள் மைக்கேல் பள்ளியில் ஹாஸ்டலில் தங்கி 10ம் வகுப்பு படித்துகொண்டிருந்தார். பள்ளி விடுமுறை நாட்களில் அவள் வீட்டிற்கு வருவார். ரஞ்சித் என்னுடைய தம்பி. அஜித் என்னுடைய தம்பி மனைவியின் தம்பி ஆவார். ரஞ்சித் வீடு என் வீடுக்கு பக்கத்தில் உள்ளது. என் மகள் லீவுக்கு வரும் நேரங்களில் அங்கு அடிக்கடி போய்வருவார். அஜித்தும் அங்கு வருவார். ஒரு முறை விடுமுறைக்கு வந்துவிட்டு என் மகள் திரும்ப ஹாஸ்டலுக்கு போய் சில மாதங்கள் கழித்து அவருடைய

வயிறு பெரிதாக இருக்கிறது என்று செக்அப் செய்து பார்த்தபோதுதான் அவர் 6 மாத கர்ப்பமாக இருப்பது தெரியவந்தது. பேபி ஹாலில்வைத்துவிசாரித்தபோது ஹாஸ்டலில் இருந்து வீட்டிற்கு வந்திருந்த சமயம் அஜித்குமாரிடம் ரஞ்சித் வீட்டில் வைத்து தங்கள் இருவருக்கும் இடையே உடலுறவு நடந்தது என்றும் அதனால் என் மகள் கர்ப்பமாக இருப்பதாக சொன்னார். அஜித் தன்னை எதுவும் கட்டாயப்படுத்தவில்லை என்றும் தன்னுடைய விருப்பத்தின் பேரில் உடலுறவு வைத்து கொண்டதாகவும் சொன்னார். சைல்டு லைனில் இருந்து வந்து விசாரித்தார்கள். போலிசாரும் வந்து விசாரித்தார்கள். ஆஜர் எதிரிதான் அஜித். (திரைச்சீலை விலக்கி காட்டப்பட்டது). போன வருடம் ஆகஸ்ட் மாதம் என மகளுக்கு ஆண் குழந்தை பிறந்தது.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-

எதிரியும் என் மகளும் தற்போது தனித்தனியாக இருக்கிறார்கள். இந்த வழக்கிற்கு பின்னர் என் மகளுக்கு 18 வயது ஆனதும் அவர்கள் இருவருக்கும் சட்டப்படி திருமணம் செய்து வைக்க முடிவு செய்திருக்கிறோம். நாங்கள் இருவரும் உறவினர்கள் என்பதால் என் மகளுக்கும் எதிரிக்கும் திருமணம் நடப்பதில் எந்த பிரச்சனைகளும் இருக்காது. இந்த எதிரிதான் என் மகளையும், குழந்தையையும் வந்து பார்த்து கொள்வார்.

<u>மறு விசாரணை</u>:- இல்லை.